**புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகம் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக,பணியகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் ஒரு பாதகமான அபிப்பிராயத்தினை இந்த பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் வெளிப்படுத்துகிறேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு

‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்கியிருக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு இணக்கமற்ற கையில் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டு முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,010 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | திருத்திய காசுப்பாய்ச்சல் சுற்று தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்துவரும் ஆண்டிலிருந்து காசுப் பாய்ச்சல் கூற்றில் இவ்வாறான தவறு ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நியமத்திலுள்ள அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், துளையிடுதல் உபகரணங்கள், வெளிக்கள உபகரணங்கள் ஆகிய சொத்துக்கள் மீள் மதிப்புச் செய்யப்பட்டிருந்தும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து இவ்வாறான தவறு ஏற்படாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் பணியகத்திற்கு எதிராக வெளித்தரப்பினர்களால் 46 வழக்குகளும் | எதிர்காலத்தில் கணக்கு கூற்றுக்களுடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வெளித்தரப்பினர்களுக்கு எதிராக பணியகத்தினால் 14 வழக்குகளும் தொடுக்கப்பட்டிருந்தும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் உரிய நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்களின் நிகர தேறக்கூடிய பெறுமதி இனங்காணப்படாது இறுதி இருப்பின் பெறுமதி அதன் கிரயத்தில் ரூபா 33,314,238 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் ஆண்டிலிருந்து பணியகத்தில் காணப்பட்ட நிகர இருப்பின் கிரயம் மற்றும் நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 10 இற்கு முரணாக அரசிறை வருமானம் காசு அடிப்படையில் இனங்காணப்பட்டு ரூபா 2,477 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 39(அ) பந்தியின் பிராரம் அரசிறை வருமானத்தை இனங்காண்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. சேவைகளை வழங்குவதனை உள்ளடக்கி கொடுக்கல் வாங்கல்களின் பூர்த்தி நிலைமையினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது அதிகாரப் பத்திர விண்ணப்பங்களை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் அறவிடப்படுகின்ற வெளிக்களப் பரிசோதனைக் கட்டணங்கள் அச்சந்தர்ப்பத்திலேயே | அகழ்தல் அனுமதிப் பத்திரங்களுக்குரிய உற்பத்தி அளவுகளை அனுமதிப்பத்திரக் காரர்களால் பணியகத்திற்குச் சமர்ப்பிக்கும் வரை ஆண்டிற்கான அரசிறையை எதிர்வுகூற முடியாது. இந்த நடைமுறைச் சிக்கலின் காரணமாக பணியகத்திறகு அரசிறையினை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்வதற்கு முடியாதுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக அதிகாரப்பத்திரத்தினை வழங்குதல் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் 78 சந்தர்ப்பங்களின் போது ரூபா 996,820 மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 10 மோட்டார் வாகனங்களுக்குரிய ஆகக்குறைந்த கொடுப்பனவு பெறுமதி இலங்கை அரசாங்க பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் பிரகாரம் கழிவு கழித்த நிகழ்கால பெறுமதியின் அடிப்படையில் கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக கழிவு கழிக்கப்படாத பெறுமதியான ரூபா 102,600,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிலிருந்து உரிய சரிசெய்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | - மேற்படி - |
| (எ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 95,060,498 தொகையான முன்னைய காலப்பகுதி செம்மையாக்கல்கள் கடந்த காலத்திற்குப் பொருத்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 1,877,992 முன்னைய காலப்பகுதிக்கான செலவாக காட்டப்பட்டிருந்தது. | அடுத்து வரும் கணக்காண்டின் போது முன்னைய காலப்பகுதிக்கான செம்மையாக்கல்களை ஒவ்வொன்றாக கவனித்துப் பார்த்து தேவைப்பட்டவாறு செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | - மேற்படி - |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் | 2019 ஆம் ஆண்டின் திறைசேரிக்கு ரூபா 550 | அதை சரியாக கணக்கிட |

| | | | |
|---|---|---|---|
| | தாதுக்கள் சட்டத்தின் பிரிவு 26(1) இன் படி அனைத்து கனிம வளங்களும் இலங்கை அரசுக்கு சொந்தமானவை என்பதால் பணியகம் சேகரித்த அரசிறை வருமானம் ஒருங்கிணைந்த நிதியில் வரவுவைக்கப்படவேண்டும். மீளாய்வாண்டில் பணியகத்தின் வருவாயிலிருந்து ரூபா 1190 மில்லியன் முன்கூட்டியே செலுத்தியது என பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான பணியகத்தின் இலாபம் அந்த தொகையை விட அதிகமாக இருந்தது. | மில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தாலும் இந்த பணம் நிலையானவைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த நிதி அரசாங்கத்தின் தேவைக்கு வழங்கப்படவேண்டும். மீளாய்வாண்டில் அவ்வாறு வழங்கப்பட்ட பணத்தை ஆண்டிற்கான செலவாக பதிவு செய்ய முடியாது என்பதால் இது தொடர்பாக இயக்குனர்கள் குழு மற்றும் பொதுமுயற்சிகள் திணைக்களத்திற்கு அறியப்படுத்துவதன் மூலம் காசுக்கணக்குகளில் 2020 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவாக இதைப்பதிவு செய்ய ஒப்புதல் பெறப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | குருணாகல் பிராந்திய அலுவலக் கட்டிடமும் அது அமைந்துள்ள காணியும் கொள்வனவு செய்த கிரயமான ரூபா 28,000,000 தொகை காணி மற்றும் கட்டிடமாக தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்ப் பதிலாக காணியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடடங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. கொள்வனவு செய்யும் போது செலவு செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணம், பதிவு செய்தல் கட்டணம், முத்திரைக் கட்டணம் ரூபா 1,238,200 மொத்த தொகை மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக செலவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | உரிய கணக்குகளுக்கு செம்மையாக்கு வதற்கும் கட்டிடங்களுக்காக பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கனிய வளங்களை அகழ்தல் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 13,588,600 தொகையான வெளிக்கள பரிசோதனை வருமானம் மற்றும் ரூபா 4,812,000 தொகையான பரிசோதனை வெடிக்க வைத்தல் வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 111,592,069 தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. பணியகம் தயாரித்திருந்த செயலாற்றல் ஊக்குவிப்பு படிகள் முறைமைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 62,482,407 தொகையான ஊக்குவிப்பு படியானது செயலாற்றலை மதிப்பீடு செய்யாது செலுத்தப்பட்டிருந்தது. | ஊக்குவிப்பு படிகளை வழங்குவதற்காக 1996 ஆகஸ்ட் மாதம் 02 ஆந் திகதிய PEI/000/6 (Incentive) ஆம் இலக்க திறைசேரிகடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. பணியகம் இந்த ஊக்குவிப்பு படியினைச் செலுத்துதலினை முறைப்படியாகச் செய்துள்ளது. | உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 ஒருங்கிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஜீஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவைக் கம்பனியின் மொத்த பங்கு மூலதனத்தில் 66 சதவீதம் அதாவது ரூபா 343,526,929 தொகையான கம்பனியின் மொத்த தேறிய சொத்துக்களில் ரூபா 226,727,773 தொகையான உரிமை பணியகத்திற்குரியது என்ற போதிலும் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் கம்பனிக்கு அதன் கணக்காண்டு சனவரியிலிரந்து திசெம்பர் வரையாக திருத்தம் செய்வதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

போது இதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் 2020 ஆம் ஆண்டிலிருந்து பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியுமாகவிருக்கும்.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஐயக் கடன் ஏற்பாடு ரூபா 5,097,526 தொகை வணிக பெற வேண்டிய பெறுமதிகளிலிருந்து கழித்துக் காட்டுவதற்குப் பதிலாக கடன் கொடுத்தோர் மற்றும் செலுத்த வேண்டியவைகளாக பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஐயக்கடன் ஏற்பாடானது பெறவேண்டிய பெறுமதிகளிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கின்றோம். | ஐயக்கடனை பெற வேண்டிய பெறுமதிகளிலிருந்து கழித்துக் காட்டுதல் வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பணியகத்தின் கடமைகள் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2014 ஆம் அண்டில் தலைவருக்கு ரூபா 1,500,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக செயற்பாடுகளை நிறைவேற்றவோ அல்லது முற்பணத்தை தீர்த்து வைக்கவோ இல்லை. | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக பணத்தை பெற்றுக்கொண்ட நபர் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமைின்மைகள்

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியவளங்கள் அதிகாரச்சட்டம் | | | |
| (i) 52(2) ஆம் பிரிவு மற்றும் 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 21(அ) ஆம் சுரங்கங்கள் மற்றும் அகழ்தல் கட்டளை | அகழ்தல்களின் பின்னர் நிலத்தை புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிம், 874 கைத்தொழில் அகழ்தல் உத்திரப் பத்திரதாரர்களினூடாக அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உத்திரவுப் பத்திரதாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 156,275,430 பெறுமதியான செல்லுபடியாகும் காலம் 2 மாதங்களிலிருந்து 09 ஆண்டுகள் வரை மிகைத்திருந்த வங்கி பிணைகள் பணமாக மாற்றப்பட்டிருந்தும் அப்பணம் நிலத்தை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாது செலுத்த வேண்டிய ஒரு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலத்தை மறுசீரமைப்புத் திட்டத்திற்கு இணங்க நிலைத்தை அகழ்தல் செய்ததன் பின்னர் புனரமைப்புச் செய்தல் வேண்டும். அதற்கான கடப்பாடாக வங்கி பிணையின் அடிப்படையில் ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றது . நிர்ணயிக்கப்பட்டவாறு புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத உத்தரவுப்பத்திரதாரர்கள ின் வங்கி பிணையானது பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப் படுவதுடன் புனரமைப்புக்களின் பின்னர் உரிய வங்கி பிணை விடுவிக்கப்படும். | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1997 சனவரி 10 ஆந் திகதிய 958 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 33(4) ஆவது சுரங்கங்கள் மற்றும் அகழ்தல்கள் பணிப்புரை | சுரங்கங்கள் உற்பத்திகளின் நிர்ணயிக்கப்பட்ட வர்த்த பெறுமதியை முடியுமான அளவில் குறைத்தல் மற்றும் அரசிறையை கொடுப்பனவு செய்தல் வேலைத்திட்டத்திற்காக செயலாளருக்கு சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்டு செயற்பாடகள் சம்பந்தமாக பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்வதற்கு தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 இன் 66 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியவளப் பொருட்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 2(உ) ஆம் பிரிவு | கனிய வளங்களுக்கு பெறுமதிகளை சேர்த்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய முயற்சிகள் பணியகத்தால் அறிமுகப்படுத்தப்படாமையின் காரணமாக அகழ்தல்கள் மேற்கொண்ட கிரபைட், கனியமணல், பளிங்கு கல் என்பவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்படாது மூலப்பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்டு காணப்பட்டன. | கனிய வளங்களுக்கு பெறுமதி சேர்ப்பது தொடர்பாக எடுக்கக்கூடிய தீர்மானம் அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் கனிய மணல், கிரபைட், பளிங்கு கல் என்பவற்றிற்கு பெறுமதிசேர்க்கும் நடைமுறைக்காக தாக்கமளித்துள்ள விடயங்களை ஆய்வு செய்து அறிக்கையிடல், அதற்காக உள்ள தடைகளை இனங்காணல், பெறுமதி சேர்க்கும் நடைமுறையில் காணப்படுகின்ற பலவீனங்கள், அப்பலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான பிரேரணைகளை இனங்காணல், பெறுமதி சேர்த்தலை தொடங்கி உள்நாட்டு போக்குகளை ‘‘கனியவள கொள்கை’’ | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | களுக்கு இணைத்துக் கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 6.2(இ) ஆம் பிரிவு மற்றும் மஹவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயலாளரின் 2018 யூலை 05 ஆந் திகதிய 02/09/01/AMPA /2018 ஆம் இலக்க கடிதம் | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ½ மாத சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடைக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், முழுச் சம்பளத்தையும் அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக 2016-2019 காலத்தில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 21 ஊழியர்களுக்கு ரூபா 8,352,114 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன், பணிக்கொடை கொடுப்பனவுக்காக முழுச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 159,753,034 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலதிகமாகச் செலுத்தியுள்ள பணிக்கொடையை மீள அறவிட்டுக் கொள்ளுமாறு அரசாங்க முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 மே 10 அந் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தும் அப்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணியகம் பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அது தொடர்பாக தொழில் திணைக்களத்தின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டள்ளது. அதற்கிணங்க மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காததனால் அறவீடு செய்யப்பட வேண்டியதில்லை. அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவில் சிபார்சு செய்யப்பட்டதானது உரிய அனைத்து அங்கீகாரங்களும் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுமாறாகும். தற்பொழுது அந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கவிதிகளின் பிரகாரம் பணிக்கொடை செலுத்துவதற்கும் மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தி | 2011 இலிருந்து 2014 வரைய காலத்திற்குரிய வெளிக்கள பரிசோதனை வரமானத்தை சேகரிக்கும் போது பெறுமதி | தற்பொழுது இணைத:து வருமானங்களுக்கும் வெட்வரி செலுத்துவதற்கு நடவடிக்கை | பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான முயற்சிகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ன் 2(1)(அ) ஆம் பிரிவு | சேர்க்கப்பட்ட வரி வாடிக்கையாளர் களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. உரிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 93,068,185 தொகை மீளாய்வாண்டின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வரிப் பணம் பணியகத்திற்கு இடம்பெற்ற ஒரு நட்டமாகும். அதற்காக பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 V ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சு வழங்கிய 1993 யூன்24 ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | சுரங்கங்கள் மற்றும் கனியவளம் விளைவற்றதாகும் போது முழுப் பிரதேசமும் 10 ஹெக்டயர்களை மிகைத்து நிலத்தின் மேற்பரப்பில் சுரங்கங்கள் தோண்டுதல் இடம்பெறாதிருக்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 18 ஹெக்டயர் பிரசேதத்தில் கனிய மணல் IML/A/HO/1623 ஆம் இலக்க தோண்டுதல் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கும் கட்டளையானது 1993 நவம்பர் 26 ஆந் திகதி 772/22 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்டது. அந்த வர்த்தமானி மற்றும் அதிகாரச்சட்டம் வழங்குவதற்கு முன்னரிலிருந்து இலங்கை கனிய மணல் கம்பனியால் இயந்திரங்களின் மூலம் தோண்டுதல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அந்த வர்த்தமானியின் மூலம் அப்போது இயந்திரங்களால் தோண்டுதல் மேற்கொண்ட அனுமதிப்பத்திரதாரர் களுக்கு அனுமதிப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பத்திரங்களைப் பெற:றுக்கொள்வதற்கு சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 10 ஹெக்டயர்களை மிகைத்த பிரதேசத்திற்காக அப்போது 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பேணப்பட்டு வந்த இந்த தோண்டுதல் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு சட்டரீதியான தடை காணப்பட்டது. | |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 757(2) மற்றும் 507(3) | ரூபா 1,208,686,416 கிரயமான நிலையான சொத்துக்களை மீளாய்வு செய்து மீளாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இருப்பு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை தற்பொழுது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் 371(5) | 70 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 இனை மிகைத்து ரூபா 810,000 வரை முற்பணங்கள் வழங்குதல் நிறைவேற்றுனர் அற்ற 6 ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குதல் ஒப்பந்த ஊழியர்களுக்கு ரூபா 200,000 வரை முற்பணங்கள் வழங்குதல், பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்த்து வைக்காதிருக்கும் போது மீண்டும் முற்பணங்கள் வழங்கியதன் காரணமாக ரூபா 8,600,845 தொகை ஒரு உத்தியோகத்தரின் கையில் வைத்திருக்கப்படுதல், | பசுமையான மணல் நிலையம் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ரூபா 810,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது 2019 யூன் 30 அளவில் தீர்த்து வைக்கப்பட்டது. தற்பொழுது பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணியகத்தின் அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்ளப்பட்ட 21 முற்பணங்கள் 1 ஆண்டிலிருந்து 1 மாதம் வரை தாமதித்து தீர்த்து வைத்தலை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஏ) | தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31.11 மற்றும் 31.15 ஆம் பந்திகள் | குற்றவியல் குற்றங்களின் கீழ் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியிலிருந்து வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பாக ரூபா 1,386,394 தொகையான அரைச் சம்பளம் மற்றும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 184,113 தொழில்சார் படியும் ரூபா 505,485 தொகையான ஊக்குவிப்பு படியும் மிகையூதியப்படியும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் ஒழுக்காற்று விசாரணை கட்டளையின்றி 2019 ஆகஸ்ட் 15 இலிருந்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். | இதன் போது பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. மேலும், உரிய உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற முறையான ஒழுக்காற்று விசாரணையை முடிவுறுத்துவதற்கு நீண்டகாலம் எடுப்பது குற்றப்பத்திரத்தில் அலகுக்குச் சாட்டப்பட்ட குற்றம் சம்பந்தமாகவும் அவரின் வேண்டுகோள் சம்பந்தமாகவும் கவனித்துப் பார்த்து அரைச் சம்பளம் செலுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. தொழில்சார் படி மற்றும் மிகையூதியம் செலுத்துவது சம்பந்தமாக மேலும் கவனித்துப் பார்த்து அறிக்கையிடப்படும். | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சட்டங்களுக்கு முரணான கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 6.5.3 ஆம் பந்தி | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள் 2020 யூன் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் தற்பொழுது அச்சிடப்பட்டு வருவதுடன் விரைவாக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 8.3.3 ஆம் பந்தி | செலுத்த வேண்டிய உச்ச அளவு ஊக்குவிப்புப் படி / மிகையூதியம் 02 மாதங்களின் மொத்த சம்பளம் என்ற போதிலும், அதற்கு முரணாக 08 மாத சம்பளத்திற்குச் சமமான ஊக்குவிப்புப் படி திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டது. | பீஈடீ 12 இல் காட்டப்பட்டுள்ளது ஊக்குவிப்பு படி (Insentive) தொடர்பாக அன்றி மிகையூதியம் (Bonus) தொடர்பாகவாகும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஈடீ 17 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி 07 வெளிநாட்டுப் பயணங்களுக்கு 12 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். | இந்த உத்தியோகத்தர்களுக்கு அமையப்படி, விசா கட்டணம், குளிர்காப்பு ஆடைப்படி மற்றும் கற்கை நெறிக் கட்டணம் மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. இணைந்த படிகள் செலுத்தப்படவில்லை. வெளிநாட்டில் தங்கியிருக்கும் 30 நாட்களை மிகைக்கவில்லை என்பதனால் தொழில் முயற்சிகள் | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்தின் அங்கீகாரம் தேவைப்படுவதில்லை. | |
| (ஓ) | 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய EC/EDR/PRE/INQ ஆம் இலக்க ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 03(iv) மற்றும் 03(v) ஆம் பந்திகள் மற்றும் 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 29/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | வெற்றிடங்களை மிகைத்து 146 ஊழியர்கள் 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து நிரந்தரமாக்கப் பட்டிருந்ததுடன் இதன் போது அங்கீகரித்த பதவியணியில் உள்ளடக்கப்படாத தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் 5 ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்குரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத இரண்டு ஊழியர்களும் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். | தற்பொழுது வெற்றிடமாக உள்ள அனைத்து பதவிகளுக்குமாக ஆட்சேர்ப்பது தொடர்பாக பத்திரிகைகளுக்கு அறிவித்தல்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய டீஎம்எஸ்/1625 vol II ஆம் இலக்க கடிதம் | ஜீஎஸ்எம்பி தொழில்நுட்ப சேவைகள் கம்பனியிடமிருந்து ஊழியர்களைப் பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகள் உள்ளடக்கப்படாதிருந்தும் அந்த ஊழியர்களுக்கு ரூபா 3,657,843 ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த ஒப்படைப்பு அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களும் பணியகத்தின் வருமானத்திற்கு பங்களிப்புச் செய்வதனால் நிதி அமைச்சினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டன. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 158,266,318 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 391,019,540 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 232,758,222 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு வருமான வரி ரூபா 98,785,974 ஆலும் நிருவாகச் செலவுகள் ரூபா 122,141,847 ஆலும் அதிகரித்தல்

அரசிறை வருமானம் ரூபா 2,338,784,035 இனால் நிதி வருமானம் ரூபா 95,173,537 இனால் மற்றும் செயற்திட்ட வருமானம் ரூபா 28,713,738 இனால் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அனுராதபுரம் மாவட்டத்தில் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட 210666 கியூப் பொரல்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 4,213,320 தொகையான அரசிறை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுராதபுரம் மாவட்டத்தில் பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் மூலம் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக மண் மற்றும் பொரல் தோன்றுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த உத்தரவுப் பத்திரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அளவுகளுக்குமாக பணியகத்தினால் அரசிறை அறவிடப்பட்டுள்ளது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 3 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிக்கள பரிசோதனையாளர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக ரூபா 1,176,552 செலவு செய்து கொள்வனவு செய்த வெளிக்கள பரிசோதனை மேற்பார்வை முறைமையை அமுல்படுத்தும் போது உருவாகிய தொழில்நுட்ப தவறுகள் சரிசெய்து கொள்ளப்படாததுடன் முறைமையினுள் எதிர்பார்த்த மேற்பார்வையும் முறையாக இடம்பெற்றிருக்கவில்லை. | இந்த மென்பொருளில் குறைபாடு காணப்படுவதனால் பணியகத்திற்கு தேவைப்பட்டவாறு அதனை மீண்டும் நாளதுவரையாக்குமாறு அதனைத் தயாரித்த கம்பனிக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. | மேற்பார்வைகளை மேற்கொண்டு அறிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தெரியப்படுத்திலின் பிரகாரம் கனிய வளங்கள் தொடர்பான ஒரு தேசிய கொள்கையைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தினால் கொள்கையை தயாரிக்கும் நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் அமைச்சரவைக்கு 2018 யூலை 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் பொது அமைச்சரவை பத்திரமாக சமர்ப்பிப்பதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | கனிய வளங்கள் தொடர்பான தேசிய கொள்கைக்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கந்தளாய், சூரியபுர, தும்மோதர பிரதேசத்தில் மஹாவலி கங்கையில் மணல் குவியல்களை அகற்றுவதற்காக அகழ்தல் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நீர்ப்பாசன திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், இலங்கை மஹாவலி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மணல் குவியலை அகற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் அகற்றக்கூடிய மணலின் நிர்ணயிக்கப்பட்ட அளவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய நிறுவனங்களின் சிபார்சுகளின் கீழ் வெள்ளப் பெருக்கினை கட்டுப்படுத்துவதற்கா அணையை நிர்மாணிக்கும் அடிப்படை நோக்கத்துடன் மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | போதியளவு நிதி சாத்திய வளமில்லாத ஒரு கம்பனிக்கு 1993 இன் 1 ஆம் இலக்க சுரங்கங்கள் தோண்டுதல் (அனுமதிப்பத்திரம் வழங்குதல்) கட்டளைகளின் 4(1) ஆம் கட்டளைக்கு முரணாக --- கிரபைட் சுரங்க செயற்திட்டத்திற்காக EL/222 ஆம் இலக்க ஆய்வு செய்தல் அனுமதிப்பத்திரம் மற்றும் IML/A/HO/13219 ஆம் இலக்க தோண்டுதல் அனுமதிப்பத்திரம் | அனுமதிப்பத்திரம் வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் இக்கம்பனி இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்ததுடன் முதலீட்டுச சபையின் செல்லுபடியாகும் தன்மை தொடர்ந்தும் காணப்படுகின்றதா என்பதனைப் பரீட்சிப்பதற்காக முதலீட்டுச் சபைக்கு ஒரு கடிதம் அனுப்பி | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய தோண்டதல் அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போதும் ஆய்வு செய்தல் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கும் போதும் 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க வெளிநாட்டு நாணயமாற்று கட்டளையின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையுடன் கம்பனி மேற்கொண்ட உடன்படிக்கை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதாவது தாமத தவறினால் இந்த அனுமதிப்பத்திரம் வழங்குதல் இடம்பெற்றிருக்குமாயிருந்தால் எதிர்காலத்தில் அவ்வாறான தவறு இடம்பெறாமைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கஹடகஹ கிரமைப் சுரங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் பலவீனங்களை ஒருங்கிணைந்த பரிசோதனை அறிக்கையின் மூலம் அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் கஹடகஹ கிரபைட் கம்பனியால் அக்குறைபாடுகளும் பலவீனங்களும் சரி செய்யப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக கவனித்துப் பார்க்காது பணியகத்தினால் அகழ்தல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது. | கஹடகஹ கிரபைட் கம்பனிக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பணியகத்தின் மேற்பார்வையின் கீழ் அகழ்வு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. | குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிய வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 28(4) ஆம் பிரிவின் பிரகாரம் கருங்கல் உற்பத்தி பொருட்களை எடுத்துச் செல்வதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய ஒழுங்குவிதிகளுக்கு முரணாக 2019 திசெம்பர் 13 ஆந் திகதிய 19 நானாவிதம் (064) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மணல், மண், மற்றும் | தற்பொழுது உச்ச நீதிமன்றத்தினால் பொலிஸ்மா அதிபருக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் எடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரம் சம்பந்தமான சட்டத்தை அமுல்படுத்துதல் இடம்பெற்று வருகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கழிமண் எடுத்துச் செல்வதற்காக 2019 திசெம்பர் 4 ஆந் திகதியிலிருந்து 2020 மார்ச் 16 ஆந் திகதி வரை எடுத்துச் செல்லல் அனுமதிப்பத்திரம் வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த கனிய வளங்களுக்கான அரசிறையானது எடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அறவிடப்பட்டு வருவதுடன் எடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யும் போது அகழ்வு செய்பவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு மாற்று நடைமுறைக்ள அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஏ) | 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிய வளங்கள் அதிகாரச்சட்டத்தின் 44(ஏ) பிரிவன் பிரகாரம் தரவுகளைச் சேகரித்தல், தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் வெளியிடுதல் அதிகாரம் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதற்காக முறையான நடைமுறையோ அல்லது பொறுப்புக்களோ ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பணியகத்தின் விபரமான தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், தயாரித்தல், வெளியிடுதல் தொடர்பாக வருடாந்தம் ஒரு கனியவள அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது. சில தாமதத் தவறின் காரணமாக அடுத்துவரும் ஆண்டிற்காக இது இடம்பெற்றிருக்காததுடன் தற்பொழுது அந்த அனைத்து அறிக்கைகளையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக | பணியகத்தினால் நிலுவையான அரசிறையை | உரிய அரசிறையை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்ட 1,343,810 கியூப் மண் 3,397 கியூப் மணல் என்பவற்றிற்காக கிடைக்க வேண்டிய அரசிறை முறையே ரூபா 26,876,200 மற்றும் ரூபா 543,490 தொகையான ரூபா 27.419,690 மொத்த தொகை ஒப்பந்த கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | செலுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கான பரிதியுடன் உரிய கம்பனிக்கு சில கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக ஞாபகப்படுத்தல் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கருங்கற்களை தோண்டும் அளவினை இனங்காண்பதற்கு விஞ்ஞான ரீதியிான நடைமுறை பின்பற்றப்படாது பயன்படுத்தப்படுகின்ற வெடிக்க வைத்தல் பொருட்களின் அளவினைப் போல இரண்டு மடங்கு தோண்டப்பட்ட அளவாகக் கருதி அரசிறை அறவிடப்பட்டமையின் காரணமாக அரசிறை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கருங்கற்களுக்கான தோண்டுதல் அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிட்ட அங்கீகரித்த அளவுகளில் 65 சதவீதம் அதாவது ரூபா 1,427,174,239 குறைத்து அரசிறை அறவிடப்பட்டிருந்தது. | உரிய அரசிறையை அறவீடு செய்தல் சம்பந்தமாக அனுமதிப்பத்திர தாரர்களுக்கு தெரியப்படுத்தப் பட்டதுடன் செலுத்தப்படாத அரசிறைக்காக அரசிறைகளை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய அரசிறையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கனிய மணலைத் தோண்டுவதற்கு இலங்கை கனிய மணல் கம்பனிக்கு புல்மோட்டை, தெவிக்காலு, கொடுவாகட்டு ஆகிய பிரதேசங்களில் 09 ஆண்டுகள் 6 மாதங்கள் காலத்திற்கு 03 தோண்டுதல் அனுமதிப்பத்திரங்களும் 2 தனியார் நிறுவனங்களுக்கு சாம்பூர், பாலைச்சேனை, வெருகல் ஆகிய பிரதேசங்களில் 10 ஆண்டுகள் | இலங்கை கனிய மணல் கம்பனிக்கு புல்மோட்டை, தெவிக்காலு, கொடுவாகட்டுவ ஆகிய பிரதேசங்களில் கனிய மணல் தோண்டுவதற்காக பணியகத்தினால் நிபந்தனையுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. உரிய நிறுவனத்தினால் அங்கீகரித்த | அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறுதல் மற்றும் அனுமதிப் பத்திரமின்றி மேற்கொள்ளப்பட்ட தோண்டுதல்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

காலத்திற்கு 3 அனுமதிப்பத்திரங்களும் வழங்கியிருந்ததன் காரணமாக வருடாந்த பெற்றுக் கொள்ள வேண்டிய கரையோரப் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் பிரசேத நிருவாக நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருக்காததுடன் அதன் மூலம் இடம்பெற வேண்டிய ஒழுங்குபடுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. இலங்கை கனிய மணல் கம்பனி அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறும் வகையிலும் அங்கீகரித்த நிலப்பரப்பினை மிகைத்தும் தோண்டுதல் செய்திருந்தும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 03 தனியார் கம்பனிகளால் நிலத்திலிருந்து 142,486 மெட்ரிக் தொன் கனிய மணற்களை அனுமதிப்பத்திரமின்றி தோண்டி எடுத்து இலங்கை கனிய மணல் கம்பனிக்கு விற்பனை செய்தல் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. 2017 நவம்பர் 17 ஆந் திகதிய 2045/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செயற்திட்ட உடன்படிக்கை மேற்கொண்டிருக்காத 75 சதவீதமான உரிமை வெளிநாட்டவர்களிடம் காணப்பட்ட ஒரு கம்பனிக்கு திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பூர் பிரசேத்தில் கனியமணல் தோண்டுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. நிலப்பரப்பை மிகைத்து தோண்டுதல் செய்யப்பட்டிருந்ததனால் அனுமதி வழங்கப்படாத பிரதேசங்களுக்காக அனுமதிக்கு விண்ணப்பிக்குமாறு பணியகத்தால் பின்னர் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. தற்பொழுது அந்த நிறுவனம் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. 03 தனியார் தரப்பினர்களால் நிலத்திலிருந்து கனிய மணல் தோண்டி எடுக்கப்படுகின்றது என்பது பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்க வில்லை.

| | | |
|---|---|---|
| (ஈ) கனிய மணலை ஏற்றுமதி செய்யும் போது 2013 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 18/33/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்ட சுரங்கம் தோண்டுதல் கட்டளை 33 இன் பிரகாரம் குழுட பெறுமதியின் அடிப்படையில் அரசிறையை அறவிடுவதற்குப் பதிலாக கனிய மணலை உள்நாட்டில் விற்பனை செய்த பெறுமதிக்கு உள்நாட்டில் விற்பனை செய்த பெறுமதிக்கு உள்நாட்டு போக்குவரத்து கட்டணங்களைச் சேர்த்து தயாரித்த விலையினை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக குறைந்த பெறுமதியின் அடிப்படையில் அரசிறை அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக இலங்கை சுங்கமும் ஏற்றுமதிப் பெறுமதியாக அவ்வாறு தயாரிக்கப்பட்ட விலையை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் சுங்கத் தீர்வையும் குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டம் மற்றும் பிரமாணங்களின் கீழ் உரிய அரசிறையை கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுரங்கங்கள் மற்றும் தோண்டுதல் கட்டளையின் பிரகாரம் அரசிறை அறவிடப்படுதல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பெறுகை நடைமுறையினைப் பின்பற்றாது தெரிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியின் மூலம் 2019-2023 காலப்பகுதிக்காக ஒரு இணைந்த திட்டத்தினையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினையும் தயாரித்துக் கொண்டு ரூபா 2,581,633 செலுத்தப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டின் பின்னர் இணைந்த திட்டம் தயாரிக்கப் பட்டிருக்காததனால் அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்கான நிறுவனத்தின் எண்ணத்தினைக் காட்டும் ஒரு கூற்றினை தயாரிக்குமாறு அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் | அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாக பயன்படுத்தாமை சம்பந்தமான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணியகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. பணியகத்தில் அச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் இல்லாததனால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒரு தொழில்சார் நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். | |

## 3.4 பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கனிய சுரங்கங்களின் இயலளவை அளவீடு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 795,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் தூரத்தை அளக்கும் உபகரணம் பயன்படுத்தப்படாது 3 ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டதுடன், பணியகத்தில் தற்பொழுது பயன்படுத்தப்படாத அச்சு இயந்திரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 601,640 தொகையான 43 டோனர்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாது காணப்பட்டது. | இது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) தனியொரு செயற்பாடாக நிறைவேற்றப்பட வேண்டிய கம்பஹா பிராந்திய அலுவலகம் | தற்பொழுது உரிய சரிசெய்தல்கள் இடம்பெற்றுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் களஞ்சியம் அமைந்துள்ள காணியைச் சுற்றி பாதுகாப்பு வேலியினை நிர்மாணித்தலானது 3 கட்டங்களாக நிறைவேற்றப்பட்டு ரூபா 4,556,463 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. முதலாம் கட்டமானது நிலமீட்டல் மற்றும் அபிவிரத்தி செய்தல் கம்பனியிடமிருந்து மாத்திரம் விலைமனுக்களைக் கோரி உடன்படிக்கைகளை மேற்கொள்ளாது அக்கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் எனைய இரண்டு கட்டங்களும் விலைமனுக்கள் கோரி விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இதன் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3, 6.3.3, 7.3.4(ஆ), 8.13.3 மற்றும் 8.13.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | குருணாகல் பிராந்திய அலுவலகத்தை செயற்படுத்துவதற்கான தேவைப்பாடு தொடர்பாக கவனத்திற் கொள்ளாது ரூபா 28,000,000 செலவு செய்து ஒரு காணியும் கட்டிடமும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடம் உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்துவதற்குப் பொருத்தமில்லாததன் காரணமாக அலுவலகம் ரூபா 90,000 மாதாந்த வாடகையின் கீழ் செயற்படுத்தப்பட்டு ரூபா 1,080,000 மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது. | காட்டப்பட்டள்ள விடயங்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | கம்பஹாவில் அமைந்துள்ள பிராந்திய அலுவலக காணியில் ரூபா 6,619,672 செலவில் பாறை மாதிரிகளின் ஒரு காப்பகமும் ஒரு ஆய்வு கூடமும் பெறுகை | தரப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

வழிகாட்டிகளுக்கு முரணாக நிர்மாணிக்கப்பட்ட தள மாடியில் நிர்மாணிக்கப்பட்ட 3 அறைகளில் 2 அறைகள் உரிய செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படாது உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பணியகத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 510 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 701 ஆக இருந்ததனால் 14 பதவிகளின் மிகைப் பதவியணியினர் 233 ஆக இருந்ததுடன், 34 பதவிகளின் வெற்றிடம் 42 ஆகும். மிகைப் பதவியணியினர் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்யாது சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர். மேல் முகாமைத்துவ மட்டத்திலுள்ள 17 பதவிகளில் எதுவித நிரந்தர ஊழியர்களும் இல்லாதிருந்ததுடன் வெற்றிடங்கள் 22 ஆகும். அங்கீகரிக்கப்படாத 8 பதவிகளுக்காக 09 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தற்பொழுது வெற்றிடமாக உள்ள அனைத்து பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்குரிய பத்திரிகை அறிவித்தலை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டின் பிரகாரம் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுதல் வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) பணியகத்தின் ஒவ்வொரு பிரிவுகளின் வருடாந்த அரையாண்டு மற்றும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமையின் காரணமாக | பணியகத்தின் ஒவ்வொரு பிரிவினால் தயாரிக்கப்பட்ட வருடாந்த அரையாண்டு மற்றும் காலாண்டு ரீதியான செயலாற்றல் அறிக்கை | செயலாற்றல் அறிக்கையை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டது. | |
| (ஆ) | பணிப்பாளர் (கனிய மீளாய்வு), பணிப்பாளர் (சுரங்கங்களைப் பாதுகாத்தல்) ஆகிய பதவிகளுக்குரிய கடமைகளான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் நிர்ணயிக்கப்பட்ட நிர்மாணங்களுக்கான மாற்று மூலப்பொருட்கள் தொடர்பாக தொடர்புபடுத்துதல், சுரங்கத் துறையின் சுற்றாடல் தீங்குகளைக் குறைத்தல், கனிய விளைதிறன் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்காக பெறுமதி சேர்த்தல், சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை புலனாய்வு செய்தல், பரிகாரம் தேடல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவோ அல்லது நிறைவேற்றப்படவோ இல்லை. செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் நடைமுறையை பின்பற்றலும் பணிப்பாளர் (சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்) இற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் (கனிய மீளாய்வு) பணிப்பாளர் (சுரங்கங்களைப் பாதுகாத்தல்) உரிய பணிப்பாளர்களுக்கு நடைமுறை தொடர்பான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |